https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

11th JUNE 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 31





அலி சப்ரியை நாடாளுமன்றில் இருந்து 05

06 திருமணம் முடிக்காத எம்பிக்கள்

# ஒளி-ஒலிபரப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால்

## 33 ஊடக நிறுவனங்களின் அனுமதி பத்திரங்கள் ரத்து

ஒளி-ஒலிபரப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் 33 ஊடக நிறுவனங்களின் அனுமதி பத்திரங்கள் 6 மாதங்களுக்குள் ரத்தாகும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு ரத்தானால் புதிய அனுமதி பத்திரத்தைப் பெற வேண்டும்.

அப்படி புதிய அனுமதி பத்திரத்தை வழங்குவதா, இல்லையா என்று ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஐவர் கொண்ட ஆணைக்குழுவே தீர்மானிக்கும்.

மேலும், ஊடகவியலாளர்களை

02

## நீதிமன்றம் செல்லும் எதிர்க்கட்சிகள்

ஒளி-ஒலிபரப்பு சட்டமூலத்துக்கு எதிராக ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகள் ஊடக நிறுவனங்களுடன் இணைந்து நீதிமன்றம் செல்வதற்கு முடிவெடுத்துள்ளன.

இது தொடர்பில் எம்பிக்களுடன் விரிவாகக் கலந்துரையாடுவதற்காக ஊடக சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

மேலும் இச்சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிப்பதற்கு அணைத்து எதிர்க்கட்சிகளும் தீர்மானித்துள்ளன.



## அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்து எதிர்க்கட்சி வரிசையில் அமர்வோம்

மொட்டு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்காமல் தொடர்ந்தும் இழுத்தடித்தால் எமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்து எதிர்க்கட்சியில் அமர்வோம் என்று எச்சரிக்கை விடுகிறார்

02




## அலி சப்ரியிடம் விசாரணை:

### சபாநாயகர் தீர்மானம்


தங்கம் கடத்தி வந்த குற்றம் தொடர்பில் அலி சப்ரி எம்பியிடம் விசாரணை நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபயவர்தன தீர்மானித்துள்ளார்.

சப்ரியை நாடாளுமன்றில் இருந்து இடைநிறுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி எம்பிக்கள் சபாநாயகருக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

எதிர்க்கட்சி எம்பிக்கள் 20 பேர் கையெழுத்திட்டு சபாநாயகரிடம் மகஜர் ஒன்றையும் அண்மையில் கையளித்தனர்.

ஆனால், தன்னால் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் நீதிமன்றமே தண்டிக்க முடியும் என்றும் கூறி ஒதுங்க பார்த்தார் சபாநாயகர்.

02





புதுசுடர்
www.puthusudar.lk
2023 JUNE 11 - SUNDAY

# இப்போது இது தேவையா?

நாட்டின் நிலைமைக்கு ஏற்ப-மக்களின் தேவைக்கு ஏற்ப நடவடிக்கை எடுப்பதுதான் ஓர் உண்மையான அரசின் கடமை.மக்கள் அரசை நிறுவுவதே அந்த நோக்கத்துக்காகத்தான்.

ஆனால்,அரசுகள் அந்த நோக்கத்தை-மக்களின் தேவைகளை சரியாக நிறைவேற்றுகிறதா என்றால் இல்லவே இல்லை.வெறும் மேல் பூச்சிக்காக ஓரிரு விடயங்களை செய்து மக்களின் கண்களை கட்டிவிட்டு மிகுதி அனைத்தையும் அவர்களின்-அரசின் தேவைக்காகவே செய்கின்றன.

ஆட்சிக்கு வந்ததும் அந்த ஆட்சி தங்களது சொந்த சொத்து என்பதுபதுபோலவே நடந்துகொள்கிறார்கள்.மக்களை முற்றாக மறந்துவிடுகிறார்கள்.மக்களுக்கு எவையெல்லாம் தேவை இல்லையோ அதைத்தான் அதிகமாக கொண்டு வருகிறார்கள்.

ஊழல்,மோசடிகளுக்கு கதவைத் திறந்துவிடுகின்றனர்.இதனால் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் மக்கள் கஷ்டப்படுகின்றனர். அப்படிப்பட்ட அரசுகளை மாற்றுவதற்காக அடுத்த தேர்தல் வரும்வரை காத்திருக்கிறார்கள்.

ஆனால்,இந்தத் தடவை மக்கள் அப்படி பொறுமையாகக் காத்திருக்கவில்லை. உடனே களத்தில் இறங்கி-போராட்டம் நடத்தி ஜனாதிபதி கோத்தாவை விரட்டியடித்தார்கள்.

இருந்தாலும்,அந்த அரசு மாறவில்லை. அந்த அரசின் தலைவராக இருந்த ஜனாதிபதிதான் மாறி இருக்கிறார்.அந்த ஜனாதிபதியின் இடத்துக்கு வந்துள்ள விக்ரமசிங்க இதைக் கவனத்தில் கொண்டு செயல்படுபவராகத் தெரியவில்லை.

எரிபொருளுக்கான வரிசையையும் மின் வெட்டையும் நீக்கிவிட்டால் எல்லாம் சரி.மக்கள் அடங்கிவிடுவார்கள்.அதுதான் மக்களின் பிரச்சினைகள் என்று நினைக்கிறார் போலும்..

டொலரின் விலை குறைந்தால்-பணவீக்கம் குறைந்தால் எல்லாம் சரி என்கிறார்.

ஆனால்,அந்த டொலரின் இறக்கமோ-பணவீக்கத்தின் சரிவோ மக்களை சென்றடையவில்லை.

இதை ஜனாதிபதியிடம் கூறினால் அந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் டொலர் குறைந்துள்ளது.அந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் பணவீக்கம் குறைந்துள்ளது என்று கூறுகிறார்.

ஆனால்,அவை மக்களுக்கு எந்த நன்மையையும் ஏற்படுத்தவில்லை.மக்கள் பிரச்சினை அப்படியேதான் இருக்கிறது .ஆனால்,அரசோ பிரச்சினைகள் தீர்ந்துகொண்டு போகின்றன என்றொரு மாயையில் மூழ்கி இருக்கிறது.

ஆனால், ஊரில் அரசியல்வாதிகளை மக்கள் பிடுங்கி எடுக்கிறார்கள்.அவர்களுக்கு இது பெரும் தலையிடி.ஏசி அறையில் இருப்பவர்களுக்கு வெளியில் மக்களின் பிரச்சினை தெரிவதில்லை என்று சொல்வது உண்மைதான் என்பது இதில் இருந்து தெரிகிறது.

அப்படியென்றால் என்ன செய்ய வேண்டும்.களத்தில் இறங்கி பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால்,ஜனாதிபதி இவற்றில் கவனம் செலுத்தாது மக்கள் கேட்காத விடயங்களை செய்யப் போவதைக் அவதானிக்க முடிகிறது.

அவற்றுள் ஒன்றுதான் ஒளி-ஒலிபரப்பு சட்டமூலம்.தேவை இல்லாத நேரத்தில் தேவை இல்லாத சட்டமூலம் இது.இதனால் மக்கள் எந்த நன்மையையும் அடையப்போவதில்லை.

இது ஊடக நிறுவனங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான -தனக்கு சாதகமாக செயற்பட வைப்பதற்கான நகர்வு என்றே தெரிகிறது.

ஒட்டுமொத்த ஊடகத் துறையும் எதிர்க்கும் இந்த சட்டமூலத்தை நிறைவேற்றினால் முழு ஊடகமும் அரசுக்கு எதிராகத் திரும்பும்"எதிர்கட்சியுடன் நிற்கும். அப்போது ஆட்சி மாற்றத்துக்கு காரணமாக அமைந்துவிடும்.

அரசின் பொருளாதார நடவடிக்கையால் இன்னும் மக்கள் நன்மையடையாத நிலையில்-மக்கள் இப்போதும் அரசின்மீது வெறுப்புடன் இருக்கும் நிலையில் ஒட்டுமொத்த ஊடக நிறுவனங்களையும் பகைத்துக்கொண்டால் அரசின் எதிர்காலம் மிக மோசமாக அமைந்துவிடும்.

மக்களும் ஊடகங்களும் கைகோக்கும் நிலை ஏற்பட்டுவிடும்.ஊடகங்கள் ஆட்சியை மாற்றும் சக்தியுடையவை என்பதை இந்த அரசு நினைவில் வைத்திருக்க வேண்டும். ஆகவே,இந்த தேவை இல்லாத திட்டத்தை கைவிடுவதுதான் அரசுக்கு -அரசின் எதிர்காலத்துக்கு நல்லது.

அதிகமான அரச எம்பிக்களுக்கு இந்த சட்டமூலத்தின்மீது உடன்பாடில்லை.அவர்கள் ஊடக நிறுவனங்களை பகைத்துக்கொள்ள விரும்பவில்லை.அவர்கள் இப்போது ஊடக நிறுவனங்களின் ஊடாக அவர்களின் அரசியல் பயணத்தைத் தொடருகிறார்கள்.

இந்த நிலையில்,அவர்கள் இந்த சட்டமூலத்துக்கு கை உயர்த்தினால் அவர்களின் அரசியல் எதிர்காலம் சிக்கலாகிவிடும்.

அரச எம்பிக்கள் ஜனாதிபதியுடன் கதைத்து இந்தத் திட்டத்தை கைவிட ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.



# உடனடி ஜனாதிபதி தேர்தல் இல்லை

குறித்த தினத்துக்கு முன் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதில்லை என்று அரசு தீர்மானித்திருப்பதாக அறிய முடிகிறது.

அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதத்தின் பின்பே தேர்தல். ஆனால், அந்தத் தேர்தலை இலக்கு வைத்து இப்போதே அடிப்படை வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி தரப்பு தீர்மானித்திருப்பதாக அரச தரப்பு தகவல்கள் கூறுகின்றன.

அதற்கு முன்னதாக உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் மாகாண சபைத் தேர்தலையும் அரசு நடத்த வேண்டும்.

ஆனால், அரசு தேர்தலை நடத்துவதற்கு பணமில்லை என்று கூறி உள்ளூராட்சி சபைத் தேர்தலை காலவரையறை இன்றி ஒத்திப்போட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல்பற்றி கதையே இல்லை. எப்படியும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன் எந்தவொரு தேர்தலும் இடம்பெறாது என்பது தெளிவாகிறது.

# வேட்பு மனுக்கள் ரத்து

*உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட வேட்பு மனுக்களை ரத்து செய்வது தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது என்று அறிய முடிகிறது.*

*அதற்காக யோசனை ஒன்றை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவருவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று அரச தகவல்கள் கூறுகின்றன.*

*ஆனால், இந்தத் தேர்தல் நடப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் குறிப்பிடத்தக்கது.*

## அமைச்சுப்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மொட்டு கட்சி எம்பியும் இராஜாங்க அமைச்சருமான சனத் நிசாந்த.

மொட்டு உறுப்பினர்களுக்கு இன்னும் அமைச்சுப் பதவிகள் வழங்காமல் ஜனாதிபதி தொடர்ந்தும் இழுத்தடிக்கின்றமை தொடர்பில் கருத்துக் கூறியபோதே இவ்வாறு கூறினார்.அவர் மேலும் கூறுகையில்

இப்போதும் மக்கள் ஆணை இருப்பது மொட்டு கட்சிக்குத்தான். பிரதமரும் ஜனாதிபதியும் விலகிய பின் அடுத்த ஜனாதிபதி யார் என்று என்று தீர்மானித்தது மொட்டு கட்சி எம்பிக்களின் பெரும்பான்மைதான்.

மொட்டு கட்சியுடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டுக்கு அமைய எமக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டும்.அவ்வாறு செய்யாமல் தோல்வியடைந்தவர்களுக்கு அமைச்சு பதவிகள் வழங்குவதை ஏற்க முடியாது.

அமைச்சுப் பதவிகள் வழங்கும் விடயத்தில் எமக்கு கோட்டா ஒன்று வழங்கப்பட்டது. அதற்கு அமைவாக எமக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டும்.

இப்போதுள்ள அரசின் உரிமையாளர்கள் மொட்டு கட்சிதான்.கட்சியின் சீனியர்களான ஜோன்சன்,ரோஹித,சி. பி.ரத்நாயக்க,விமலவீர திஸாநாயக்க ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டும்.

அவர்கள் இப்போது வெளியே அமரவைக்கப்பட்டுள்ளார்கள். தொடர்ந்தும் இதைப் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது.

இனியும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படாவிட்டால் அமைச்சுப் பதவிகளை ராஜினாமா செய்து எதிர்க்கட்சி வரிசையில் அமர்வோம்-என்றார்.

## அலி சப்ரியிடம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆனால், 2008இல் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட எம்பிக்களுக்கான ஒழுக்க கோவையை அடிப்படையாகக் கொண்டு சபாநாயகரால் சப்ரிக்குத் தண்டனை வழங்க முடியும் என்று எம்பிக்கள் கூறி சபாநாயகருக்குத் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருகிறார்கள்.

இதனைத் தொடர்ந்து சப்ரியிடம் விசாரணை நடத்துவதற்கு சபாநாயகர் தீர்மானித்துள்ளார்.அதற்கு அமைவாக சுங்கத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடம் இருந்து அறிக்கையை பெறுமாறு சபாநாயகர் நாடாளுமன்ற செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

## ஒளி-ஒலி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**சிறை அனுப்புவதற்கும் ஊடக நிறுவனங்களில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் இந்த சட்டமூலம் வழிவகுக்கும்.**









# பதவி விலகமாட்டேன்: யாரும் விலகுமாறு கேட்கவும் இல்லை

தங்கம் கடத்தி வந்து விமான நிலையத்தில் சிக்கிய அலி சப்ரி எம்பியை எம்பி பதவியில் இருந்து விலகுமாறு பலர் அழுத்தம் கொடுத்து வருகின்றனர். ஆனால்,தான் விலகப்போவதில்லை என்றும் விலகுமாறு என்னிடம் யாரும் கேட்கவும் இல்லை என்றும் அலி சப்ரி கூறினார்.

இதேவேளை,இந்த விவகாரத்தில் நாடாளுமன்றத்தால் தலையிட முடியாது என்று கூறி கைவிரித்துள்ள சபாநாயகர் மஹிந்த யாப்பா அபயவர்தன இதை நீதிமன்றுக்குக் கொண்டு செல்லுமாறு எம்பிக்களிடம் கூறியுள்ளார்.

சப்ரியை விலக்குமாறு கோரி 20 எம்பிக்கள் கையெழுத்திட்டு சபாநாயகரிடம் மகஜர் ஒன்றையும் அண்மையில் கையளித்திருந்தனர். அந்த மகஜருக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க சபாநாயகர் மறுத்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட எம்பிக்களுக்கான ஒழுக்க கோவையின் அடிப்படையில் அலி சப்ரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் என்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா கூறியுள்ளார்.

இருந்தும்,அப்படி முடியாது என்றும் நீதிமன்றமே அதை பார்க்க வேண்டும் என்றும் சபாநாயகர் கூறியுள்ளார்.

## ஊடகவியலாளர்களை சிறைக்கு அனுப்பும் தேவை ஜனாதிபதிக்கு இல்லை

ஊடகவியலாளர்கள் எவரையும் சிறைக்கு அனுப்ப வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இல்லை என்று வஜிர அபயவர்தன எம்பி தெரிவித்துள்ளார்.

தொடர்பில் அவர் கருத்துக் கூறுகையில்,

ஒளிபரப்பு சட்டமூலம் தொடர்பில் ஊடக நிறுவனங்கள் கலவரமடைந்துள்ளன. அந்தச் சட்டமூலம் ஊடகங்களுக்கு எதிரானது என்றும் ஊடகவியலாளர்களை சிறைக்கு அனுப்பக்கூடியது என்றும் கூறுகிறார்கள்..

ஊடகவியலாளர்கள் எவரையும் சிறைக்கு அனுப்ப வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இல்லை.வீணாக ஊடக நிறுவனங்கள் கலவரமடையத் தேவை இல்லை.-என்றார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மனுஷ நாணயக்கார,ஊடக நிறுவனங்கள் தலையிட்டு மக்களின் வீடுகளை எரிக்காவிட்டால் ஊடக நிறுவனங்கள் பயப்பட வேண்டிய தேவை இல்லை என்றார்.






## விமான நிலையத்தில் விஜபி வழி மூடப்படுமா?

அலி சப்ரி எம்பி தங்கம் கடத்தி வந்த சம்பவத்துக்கு பிறகு விமான நிலையத்தில் இருக்கின்ற விஜபி வழி மூடப்பட வேண்டும்.சாதாரண மக்கள் பயணிக்கின்ற வழியாலேயே எல்லோரும் இனி பயணிக்க வேண்டும் என்று சில எம்பிக்கள் கோரிக்கை வைக்கத் தொடங்கியுள்ளனர்.

எம்பிக்களுக்கு விமான நிலையத்தில் அப்படியொரு சிறப்புரிமை தேவை இல்லை.இது மோசடிக்கே வழிவகுக்கும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி,பிரதமர்,வெளிநாட்டு இராஜதந்திரிகள் வேண்டுமால் அந்த வழியைப் பயன்படுத்தட்டும். என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை,அலி சப்ரிக்கு எதிராக சபாநாயகர் நாடாளுமன்றில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால்-அவரை சபையில் இருந்து இடைநிறுத்தவில்லை என்றால் விமான நிலையத்தில் உள்ள விஜபி வழி மூடப்பட வேண்டும் என்று இரான் விக்ரமரத்ன எம்பி கூறியுள்ளார்.

இவ்வாறு பல எம்பிக்கள் இந்த பாதை மூடப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளதை அவதானிக்க முடிகிறது.

# USAID மற்றும் IREX ஏற்பாட்டில் MoJo Lanka – இலங்கையின் முதலாவது மொபைல் ஊடகவியல் விழா






மொபைல் ஊடகவியல் மற்றும் டிஜிட்டல் கதைகூறலுக்கென காணப்படும் சக்தியை கொண்டாடும் இரண்டு நாள் நிகழ்வான MoJo Lanka விழாவினை அறிவிப்பதில் அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி முகவர் அமைப்பு (USAID) மற்றும் சர்வதேச ஆராய்ச்சி மற்றும் பரிமாற்றுச் சபை நிறுவனமாகிய (IREX) நாம் பெருமிதம் கொள்கின்றோம்.

இந்த விழா, எதிர்வரும் ஜுன் மாதம் 24-25ஆம் திகதிகளில் கொழும்பிலுள்ள Marriott Courtyard ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

துரிதமாக வளர்ந்துவரும் மொபைல் ஊடகவியலில் தடம் பதிப்பதற்கு, ஊடகவியலாளர்கள், கதைசொல்லிகள் மற்றும் படைப்பாளிகளுக்கு ஆழதுழ டுயமெய ஒரு சிறந்த தளத்தினை வழங்கும். இந்நிகழ்வில், பிரஜை ஊடகவியலின் சக்திவாய்ந்த தாக்கம், போலிச் செய்திகளை எதிர்த்துப் போராடுவதற்கான மூலோபாயங்கள் மற்றும் டிஜிட்டல் உள்ளடக்கத்திற்கான பார்வையாளர்களை வளர்ப்பதற்கான நுட்பங்கள் உள்ளிட்ட முக்கிய விடயப்பரப்புகளின் கீழ் தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்கள் இணைந்து பல்வேறு குழு கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளனர்.

மோஜோ நிபுணரும், #MoJoFest நிறுவுனருமான Glen Mulcahy முக்கிய பேச்சாளராக கலந்து கொள்வதில் இவ்விழா பெருமிதம் கொள்கிறது. மொபைல் ஊடகவியலின் உலகளாவிய விரிவாக்கத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ள இவர்பார்வையாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தனது அனுபவங்களை பகிர்ந்துகொள்வார்.

அத்தோடு, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சுங் உரையாற்றவுள்ளார். MoJo கதைசொல்லலின் நுணுக்கங்களைப் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பை பங்கேற்பாளர்களுக்கு வழங்கும் வகையில், உள்ளூர் மற்றும் சர்வதேச நிபுணர்களின் வழிகாட்டல் அமர்வும் இடம்பெறும்.

தொழில் ரீதியில் பாண்டித்தியம் பெற்ற, முழுக்க முழுக்க வீடியோ-பத்திரிக்கையாளர்களால் பணியமர்த்தப்பட்ட முதல் பிபிசி செய்தி அறையின் ஆசிரியரான David Hayward, மொபைல் அறிக்கையிடலின் அதிகரித்துவரும் முக்கியத்துவத்தைப் பற்றி கலந்துரையாடுவதற்காக ஏனைய தொழில்சார் வல்லுநர்களுடன் இணைந்துகொள்வார். சிறந்த கதையொன்றை படமாக்குவது பற்றி, விருதுபெற்ற மொபைல் ஊடகவியலாளரும், தயாரிப்பாளருமான கே.சி சாரங்க உரையாற்றுவார்.

“செய்தித்துறையின் மிகப்பெரிய புரட்சியாக மொபைல் ஊடகவியல் காணப்படுகின்றது. யாராக இருந்தாலும் கையடக்கத் தொலைபேசி ஊடாக, உடனடி செய்திகளை வழங்குவதற்கு ஒரு படப்பிடிப்பாளராக, செய்தி ஆசிரியராக, தயாரிப்பாளராக மற்றும் வெளியிடுபவராக அவரால் செயற்பட முடியும். சிறந்த பத்திரிகை கலாசாரத்தை சீர்குலைக்கும் வகையில் தவறான மற்றும் போலிச் செய்திகள் அதிகரித்து வருகின்றன.

அவற்றைத் தணிக்கும் நோக்கில், இந்த முயற்சிக்கு நாம் ஆதரவளிக்கின்றோம். ஜனநாயகத்தின் பிரதான தூண்களில் ஒன்றாகக் காணப்படும் ஊடகத்துறை ஒருமைப்பாட்டிற்கு அமெரிக்கா ஒரு வலுவான ஆதரவாளராக செயற்படுகின்றது.

விசேடமாக, இலங்கையின் ஜனநாயகமானது நீண்ட, பெருமைமிக்க மற்றும் நெகிழ்திறன் கொண்டதாகும். இதுவே, இரு நாடுகளுக்கும் இடையிலான 75 வருடகால நெருங்கிய பங்காளித்துவத்திற்காக நாம் கடைப்பிடிக்கும் நிலைப்பாடாகும்” என இலங்கை மற்றும் மாலைதீவுக்கான USAIDஇன் செயற்பாட்டு பணிப்பாளர் கப்ரியேல் க்ராவ் (Gabriel Grau) குறிப்பிட்டார்.”

இலங்கையில் மொபைல் ஊடகவியலை மேம்படுத்துவதில் USAIDஇன்ஆதரவுடனான , ஜனநாயக இலங்கைக்கான ஊடகங்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் (MEND) ஒரு உந்துசக்தியாக செயற்படுகின்றது. அதன் உறுதியான வெளிப்பாடாகவே இந்த நிகழ்வு இடம்பெறுகின்றது.

குறிப்பாக, வளர்ந்துவரும் மற்றும் ஏற்கனவே இத்துறையில் உள்ள படைப்பாளிகளுக்குஒரு வலையமைப்பை உருவாக்குவதற்கு, அனுபவங்களை பகிர்ந்துகொள்வதற்கு மற்றும் அவர்களது பணியினை வெளிப்படுத்துவதற்கான தளத்தினை இது வழங்குகின்றது.

தொடர் 04



# பிரபாவின் இறுதி நிமிடம்...!!

ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்



# படையினரிடம் வீழ்ந்துகொண்டு செல்லும் புலிகளின் பங்கர்கள்

ஒரே நேரத்தில் அந்த இடங்கள்மீதும் தாக்குதல்.சரியாக காலை 5 மணிக்கு.

இதுதான் திட்டம்.

இந்த படையினருக்கு பின் மற்றுமொரு படையணி.இவர்களின் உதவிக்கு.

பீரங்கிப் படையும் தயார் நிலையில்...

கேப்டன் ஹேவா பாதகே ஜயரத்னவுக்கு உத்தரவிடுகிறார்.

“நீங்கள் தாக்குதலைத் தொடங்குங்கள் பின்னால் நாங்கள் வந்துகொண்டு இருக்கிறோம்.“

திட்டமிட்டபடியே தாக்குதல்.சீபு யில் இருந்து...

எதிர்பார்க்கவில்லை புலிகள்.

நிலைகுலைகிறார்கள்.

தொடர் தாக்குதல். இடைவெளி இல்லை.

பதிலுக்குப் புலிகளும்....

நடக்கிறது சண்டை.

சற்று நேரத்தில் ஓய்வு.

மூன்று புலிகள்தான் அதற்குள்.அந்த பங்கருக்குள்.

இருவர் பலி. ஒருவரைக் காணவில்லை.

தலையைத் தூக்குகிறார்கள் படையினர். பங்கருக்குள் இருந்து...

வருகின்றன வெடிகள். அங்கிருந்து...

இன்னும் எஞ்சி இருக்கிறார்கள். அவதானிக்கிறார்கள் படையினர்.

ஒரேயொரு புலிதான். அந்த பங்கருக்குள் இப்போது...

சுடுகிறான்.. தலையைத் தூக்கி.பின்னர் குனிகிறான்.

அவனைத் துப்பாக்கியால் சுட முடியாது.

ஒரே வழி. அதற்குள் – அந்த பங்கருக்குள் கைக்குண்டு ஒன்றை வீசுவதுதான்..

பங்கருக்கு மேல் தட்டும் இல்லை.இதனால் குண்டு வீசுவது இலகு.

அப்படியே செய்கிறார்கள்....

வீழ்கிறது நடுவில்.20 மீற்றர் தூரம் அளவில். வெடிக்கிறது அங்கேயே.

வீசும் தூரத்துக்குள் அப்பால் அந்த பங்கர்.

பதிலுக்கு அவனும் வீசுகிறான் இவர்களை நோக்கி...

அதுவும் இடை நடுவில்தான்.

இரண்டு பங்கர்களுக்கும் இடையில் தூரம் அதிகம்.

கைகளால் வீசும் அளவுக்கு தூரம் போதாது.துப்பாக்கிச் சூட்டுக்குத் தாராளமான தூரம்.

ஆனால், அதுவும் சாத்தியமில்லை.

அப்படியென்றால் என்ன செய்வது...???

ஒரேயொரு வழிதான்...

என்ன அது...???

ஒரே மூச்சில் சுட்டுக்கொண்டு நகர்வது..

இதுதான் இறுதித் தீர்மானம்.

காலை 8 மணி.நகர்கிறார்கள் திட்டப்படியே...

லெப்டினன் ஜயரத்ன குறிவைத்துக் காத்துக்கொண்டிருக்கிறார்.அவன் தலையைத் தூக்கும்போது சுடுவதற்கு.

அவ்வாறே தூக்குகிறான்.

அவனும் தூக்க...ஜயரத்னவும் சுட.... சரியாக இருக்கிறது.

சரியான டைமிங்...

படுகிறது வெடில். அவனது கையில்...

வீழ்கிறது அவனது துப்பாக்கி.

கொஞ்சம் வெயிட்.

எடுத்த எடுப்பில் நகரவில்லை. அவனிடமிருந்து எந்தத் தாக்குதலும் இல்லை.

இப்போது முன்னேறுகிறார்கள் மெல்ல. எட்டிப் பார்க்கிறார்கள் உள்ளே.பங்கருக்கு உள்ளே..!!!

வீழ்ந்து கிடக்கிறான் அந்தப் புலி. அவனொரு புறம்.துப்பாக்கி மறுபுறம்.

துள்ளி எழும்புகிறான் இராணுவத்தைக் கண்டதும்.பாய்கிறான் துப்பாக்கியை நோக்கி...

அதற்குள் கதை சரி.

ஆம்... சுட்டுத் தள்ளுகிறார் ஒரு சிப்பாய்.

முதல் வெடில் அவனது கையில்தான். அதனால் மரணிக்கவில்லை.

இப்போது சரி....

சற்றுத் தள்ளி இன்னொரு பங்கர்.நிலக்கீழ் பங்கர்.

எடுத்த எடுப்பில் நுழைய முடியாது. புலிகள் இருக்கக்கூடும் உள்ளே...!!!.

அதற்கு ஒரே வழிதான்.உள்ளே குண்டுகளை வீசுவதுதான்...

அவ்வாறே செய்கிறார்கள். சுற்றி நின்று...

படையினர் நினைத்தது சரி...

ஆம்...

உள்ளே புலிகள்...!!!

வருகின்றன கைக்குண்டுகள் அங்கிருந்து.படையினரை நோக்கி...

பதிலுக்கு இவர்களும்....

கழற்றி வீசுகிறார்கள் ஒவ்வொரு குண்டாக. பல குண்டுகள்.

அதற்குள் இருந்த புலிகளும் சரி.

இனி அடுத்த பங்கர்கள்...!!!

தொடர்கிறது தாக்குதல்...

இந்த அணிக்கு ஆதரவாக இன்னொரு அணி.கெப்டன் ஹேவா பாதகே தலைமையில்...

நிழல்போல் தொடர்கிறது இவர்களை...

இதனால் இன்னும் உட்சாகம்.இவர்களுக்கு...ஜயரத்னவின் அணிக்கு...

நகர்கிறார்கள்.சப்தமிட்டுக்கொண்டே.... வேகத்தை–துணிச்சலை அதிகரிக்கும் வியூகம் அது.

இதனால் புலிகளுக்கு குழப்பம். பாரிய எண்ணிக்கையிலான படையினர் என்றே நினைக்கிறார்கள்.இதனால் பின்வாங்குகிறார்கள்.

நான்கைந்து பங்கர்கள் இப்போது படையினர் வசம்.

அடுத்து...??? பார்ப்போம்...



மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த



பிரிகேடியர் பிரசன்ன சில்வா



லெப்டினன். ஐ.பி.ஜயரத்ன

மூன்று புலிகள்தான் அதற்குள்.அந்த பங்கருக்குள்.
இருவர் பலி. ஒருவரைக் காணவில்லை.
தலையைத் தூக்குகிறார்கள் படையினர்.பங்கருக்குள் இருந்து... வருகின்றன வெடிகள். அங்கிருந்து...
இன்னும் எஞ்சி இருக்கிறார்கள்.அவதானிக்கிறார்கள் படையினர்.
ஒரேயொரு புலிதான்.அந்த பங்கருக்குள் இப்போது...
சுடுகிறான்..தலையைத் தூக்கி.பின்னர் குனிகிறான்.
அவனைத் துப்பாக்கியால் சுட முடியாது.
ஒரே வழி.அதற்குள் -அந்த பங்கருக்குள் கைக்குண்டு ஒன்றை வீசுவதுதான்..
பங்கருக்கு மேல் தட்டும் இல்லை.இதனால் குண்டு வீசுவது இலகு.
அப்படியே செய்கிறார்கள்....





- **எரிபொருட்களின் விலைகள் குறைந்துள்ளன.பொருளாதாரம் அபிவிருத்தி அடைந்து வருகிறது என்று நீங்கள் நம்புகிறீர்களா?**
- **ஊழல்,மோசடி தடுப்பு சட்டமூலம் நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்படவுள்ளது.அது தொடர்பில் உங்களது நிலைப்பாடு...?**
- **கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளாரே?**
- **தகுதியானவர்கள் அரசியலுக்கு வருவதற்கு-நாடாளுமன்றம் செல்வதற்கு என்ன செய்ய வேண்டும்?**
- **தேர்தலை நடத்துவதற்காக எவ்வகையான அழுத்தத்தை நீங்கள் அரசுக்கு கொடுக்கவுள்ளீர்கள்?**

# அலி சப்ரியை நாடாளுமன்றில் இருந்து இடைநிறுத்த வேண்டும்

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் ஐக்கிய மக்கள் சக்தி எம்பி இரான் விக்ரமரத்ன.அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது..

**கேள்வி : எரிபொருட்களின் விலைகள் குறைந்துள்ளன.பொருளாதாரம் அபிவிருத்தி அடைந்து வருகிறது என்று நீங்கள் நம்புகிறீர்களா?**

பதில் : பொருளாதாரம் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது.வங்குரோத்து அடைந்த நாடாக இலங்கையை அப்போது கோத்தா அரசு பிரகடனப்படுத்தியதும் பொருட்களின் விலைகள் அதிகமாக உயர்வடைந்தன.

டொலர் ஒன்றின் விலை 370 ரூபாவைத் தாண்டியது.அப்படிப் போனால் பொருட்களின் விலைகள் குறைந்தே ஆகவேண்டும்.

இப்போது குறைந்திருப்பது நல்ல விடயம்தான்.இதைவிட அதிகமாக குறைய வேண்டும்.

எரிபொருள் வரிசை இல்லை என்பது ஒரு மாயை.

இது வெற்றிகரமான செயற்பாடு என்று சொல்ல முடியாது.

**கேள்வி : ஏன் இதை உங்களால் வெற்றிகரமான செயற்பாடாக ஏற்க முடியாது?**

பதில் : எரிபொருள் வரிசை இல்லைப்பால்மா வரிசை இல்லை மின் வெட்டு இல்லை என்பதை வைத்துக்கொண்டு பொருளாதாரம் முன்னேறுகிறது என்று சொல்ல முடியாது. பொருளாதார முன்னேற்றத்தை அளவீடு செய்வது இவற்றை வைத்து அல்ல. அதற்கு அப்பால் சென்றுதான் பொருளாதாரத்தை அளக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றமைக்கு நாம் உடன்படுகிறோம்.நாணய நிதியத்தின் நிபந்தனைகளுடன் உடன்படமாட்டோம்.

அதில் கையெழுத்திடும்வரை எமக்கு எதுவும் தெரியாது.எல்லாம் முடிந்து நாடாளுமன்றில் வாக்கெடுப்புக்கு விட்டபோதுதான் எமக்கு தெரியும்.

எமக்கு சாதகமான வகையில் நாணய நிதிய நிபந்தனைகளை நாம் மாற்றவில்லை.

**கேள்வி : அலி சப்ரி எம்பி தங்கம் கடத்தி வந்தமை தொடர்பில்...?**

பதில் : உண்மையில் இது குறித்து நான் வெட்கப்படுகிறேன்.சபாநாயகர் அவரை உடனடியாக நாடாளுமன்றத்தில் இருந்து இடைநிறுத்த வேண்டும்.

அப்படிச் செய்ய முடியாது என்று சிலர் கூறலாம்.2018இல் எமது ஆட்சியில் ஒழுக்கவியல் கோவை சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தோம்.

2018 ஏப்ரல் 15இல் இருந்து அது நடைமுறைக்கு வந்தது.இருந்தும்,அது சரியாகப் பயன்படுத்தப்படவில்லை.

அதில் சபாநாயகர் தண்டனை வழங்கும் முறைப்பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. நீதிமன்ற தீர்ப்பு வரும்வரை காத்திருக்கத் தேவை இல்லை.

சபாநாயகரிடமே முழுப் பொறுப்பும் உண்டு.

அலி சப்ரிக்கு எதிராக நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்பதில் பெரும்பான்மையான எம்பிக்கள் உடன்படுகிறார்கள்.

எதிர்க்கட்சி.ஆளுங்கட்சி என எல்லோரும்.

அவருக்குத் தண்டனை வழங்காவிட்டால் விமான நிலையத்தில் உள்ள விஐபி பகுதியை மூடிவிட வேண்டும்.

சட்டம் என்பது அனைவருக்கும் சமம்.

**கேள்வி : ஊழல்,மோசடி தடுப்பு சட்டமூலம் நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்படவுள்ளது.அது தொடர்பில் உங்களது நிலைப்பாடு...?**

பதில் : அந்தச் சட்டமூலத்தில் அதிக குறைபாடுகள் உள்ளன.ஊழல். மோசடி தொடர்பில் ஒருவர்மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அதை அவரால் நிரூபிக்க முடியாமல் போனால் குற்றஞ்சாட்டியவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து 10 லட்சம் ரூபாவை அபராதம் விதிக்க முடியும்.அல்லது 10 வருடங்களுக்கு சிறை அனுப்ப முடியும்.

இதை ஏற்க முடியாது.இது குற்றஞ்சாட்டுகிறவரை சிறைக்கு அனுப்புகிற சட்டமூலம்.

இப்படி பல குறைப்படுகள் உள்ளன.

அதுமட்டுமல்ல.முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் நாடாளுமன்றில் உள்ளார்கள். அவர்கள் அவர்களின் சொத்து விபரங்களை வெளியிட வேண்டும்.

**கேள்வி :கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளாரே ?**

பதில் : அதற்காக அரசுடன் இணைய வேண்டிய தேவை இல்லை.என்னை பொறுத்தவரை என்னால் அரசு பக்கம் செல்ல முடியாது.எனக்கு அதற்கான மக்கள் ஆணை தேர்தலின் ஊடாகக் கிடைக்கவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது சிறிய கட்சியல்ல.நாம்தான் அடுத்த அரசு. ஆகவே,நாம் பொறுப்புடன் செயற்பட வேண்டியுள்ளது.

எதிர்க்க வேண்டிய விடயங்களை எதிர்ப்போம்.மக்களை பிரச்சினைகளில் இருந்து காப்பாற்ற முடியும் என்றால் அதற்காக நாம் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டே ஆதரவு வழங்குவோம்.

அது அரசுக்காக அல்ல,நாட்டுக்காக-நாட்டு மக்களுக்காக.

**கேள்வி : தகுதியானவர்கள் அரசியலுக்கு வருவதற்கு-நாடாளுமன்றம் செல்வதற்கு என்ன செய்ய வேண்டும்?**

பதில் : ஆசிய நாடுகள் முன்னேறி இருப்பது தகுதியான தனிநபரால்தான்.நான் தகுதியான பலரை அடையாளம் கண்டு அரசியலுக்கு அழைத்திருக்கிறேன்.எவரும் விரும்பவில்லை.

இது ஒரு சாக்கடை.இதற்குள் போய் வீழ்வதற்க்கு விருப்பமில்லை என்று கூறிவிட்டனர்.பலரை அழைத்து ஒரு சிலர்தான் வந்துள்ளனர்.

நான் அரசியலுக்கு வந்தது வங்கி துறையின் உயர் பதவியில் இருந்து.நான் அரசியலுக்கு வருவதை ஓரிருவரைத் தவிர எல்லோரும் எதிர்த்தனர்.

இளைஞர்கள் அரசியலுக்கு வர வேண்டும்.அதற்காக முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இதைத்தான் போராட்டக்காரர்கள் கேட்டுக்கொண்டார்கள்.இதைப் புரிந்து அதற்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் இளைஞர்கள்-தகுதியானவர்கள் அரசியலுக்கு வர வேண்டும்.

**கேள்வி : தேர்தலை நடத்துவதற்காக எவ்வகையான அழுத்தத்தை நீங்கள் அரசுக்கு கொடுக்கவுள்ளீர்கள்?**

பதில் : தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உள்ளோம்.

கடந்த வருடம் புரட்சி ஒன்று இடம்பெற்றது. அந்த புரட்சியின் விளைவாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விரட்டப்பட்டார் பிரதமர் விரட்டப்பட்டார் நிதி அமைச்சர் விரட்டப்பட்டார். அமைச்சரவை விரட்டப்பட்டது மொத்தமாக அரசே விரட்டப்பட்டது.

கோத்தா சட்டரீதியான ஜனாதிபதி.அப்படி இருந்தும்,அவருக்கான அங்கீகாரம் இல்லாமல் போனது.

நாடாளுமன்றத்துக்கும் இதேநிலைதான்.

இதனால் மக்கள் விரும்புகின்றவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதற்கு மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

அப்படிப்பட்ட நாடாளுமன்றத்தால்தான் நாட்டை சரியாக இட்டுச் செல்ல முடியும்.

இதனால் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் நிற்கிறோம்.

**கேள்வி : எதிர்காலத் தேர்தல்களில் உங்களால் தகுதியானவர்கள்தான் நிறுத்தப்படுவார்கள் என்று உங்களால் மக்களுக்கு உறுதி வழங்க முடியுமா?**

பதில் : புதியவர்கள் தேர்தலில் போட்டியிட விரும்பினால் அவர்களுக்கு இடம் கொடுக்க எமது கட்சி தயார்.ஆனால், நூறு வீதம் தகுதியான ஆட்களைத்தான் நிறுத்துகிறோம் என்று சொல்ல முடியாது.- என்றார்.



> எரிபொருள் வரிசை இல்லைப்பால்மா வரிசை இல்லை மின் வெட்டு இல்லை என்பதை வைத்துக்கொண்டு பொருளாதாரம் முன்னேறுகிறது என்று சொல்ல முடியாது. பொருளாதார முன்னேற்றத்தை அளவீடு செய்வது இவற்றை வைத்து அல்ல.அதற்கு அப்பால் சென்றுதான் பொருளாதாரத்தை அளக்க வேண்டும்.

# அரசியல்வாதிகளை அழைக்காத சம்பிக்க வீட்டுத் திருமணம்

அரசியல்வாதிகளின் திருமணம் என்றாலே ஒரே திருவிழாதான்.ஐந்து நட்சத்திர ஹோட்டலில் அல்லது ஏதோ ஒரு பெரிய மாளிகையில் தடபுடலாக இடம்பெறும்.

பெரிய பெரிய அரசியல் தலைவர்கள்இவிஜபிக்கள் என பெரும் புள்ளிகள்தான் அந்தத் திருமணத்துக்கு அழைக்கப்படுவார்கள்.

கோடி கணக்கான ரூபா பணம் செலவிடப்படும்.

ஆனால்இளங்கோ ஓரிடத்தில் ஓரிரு திருமணம்தான் மிக எளிமையாக இடம்பெறும்.

அப்படியான ஒரு திருமணம் இடம்பெற்றது இந்த மாதம் முதலாம் திகதி. அது சம்பிக்க ரணவக்க எம்பியின் வீட்டுத் திருமணம்.

சம்பிக்கவின் மூத்த மகளின் திருமணம் அது.

தலவத்துக்கொடவில் உள்ள மொனார்ச் இம்பீரியல் ஹோட்டலில் அது இடம்பெற்றது.

அரசியல்வாதிகள் .விஜபிக்கள் என எவரும் அழைக்கப்படவில்லை.ஏழ்மையான முறையில் –முடியுமானவரை குறைந்த செலவில் அது இடம்பெற்றது.

திருமணத்துக்கு முதல் நாள் டலஸ் அழகபெருமவை சந்தித்தார் சம்பிக்க.

அப்போதுகூட திருமணம் பற்றி ஒரு வார்த்தைகூட பேசவில்லை சம்பிக்க.

அழைக்கவுமில்லைத்தகவல் கொடுக்கவுமில்லை.

அந்தத் திருமணத்தில் சம்பிக்க மனமக்களுக்காக பாடல் ஒன்றையும் பாடி அசத்தினார்.

சபாஷ்....



## ஏன் எங்களை அழைக்கவில்லை?

இந்தத் திருமணம் நடந்ததை கேள்விப்பட்ட சம்பிக்கவின் சில அரசியல் நண்பர்கள் ஏன் எங்களை அழைக்கவில்லை என்று அவரிடம் வினவினார்களாம்.

அதற்கு சம்பிக்க சொன்ன பதில். அது எனது தீர்மானம் அல்ல. மணமக்களின் தீர்மானம்.

அரசியல்வாதிகளை அழைப்பதில்லை என்ற முடிவை அவர்கள்தான் எடுத்தார்கள். அவர்களின் முடிவுக்கு நான் தடை போட விரும்பவில்லை.

சேர்ந்து வாழப் போகிறவர்கள் அவர்கள்.அவர்களின் தீர்மானத்துக்கே விட்டுவிட்டேன் என்றாராம்.

கோல்பேஸ் போராட்டத்துக்கு பின் அரசியல்வாதிகளை வெறுக்கின்ற ஒரு இளம் சமுதாயம் உருவாகி வருவதை இதன் மூலம் காணக்கிடைக்கிறது.

அதுவும் அரசியல்வாதியின் பிள்ளையே அரசியல்வாதிகளை வெறுக்கும் நிலை ஏற்பட்டியிருப்பது உண்மையில் ஆரோக்கியமான தகவல்தான்.

## யாருக்கும் பயமில்லை

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட சாகல ரத்நாயக்க அது தொடர்பில் பேசுவதற்காக கடந்த வாரம் ஜனாதிபதியைச் சந்தித்தார்.

அவரோடு ஹரீன் பெர்னாண்டோஇ வடிவேல் சுரேஷ் ஆகியோரும் சென்றிருந்தனர்.

வடிவேலை கண்ட ஜனாதிபதி ""ஆஆ.... உங்களுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணை எப்படி போகுது.நீங்க இப்ப இங்க வந்த செய்தி கேள்விப்பட்டா ஒன்றும் செய்யமாட்டாங்களா "" என்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த வடிவேல் நான் யாருக்கும் பயபுடமாட்டேன்.நான் சரியானதை மாத்திரமே செய்கிறேன்.அதனால் நான் யாருக்கும் பயப்புட வேண்டிய அவசியம் இல்லை என்றார்.





## துப்பறிவாளன்

## திருமணம் முடிக்காத எம்பிக்கள்



கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் மொட்டு கட்சி எம்பிக்கள் சிலர் ஒன்றுகூடி அரட்டையடித்துக் கொண்டிருந்தனர்.

அந்த அரட்டை மொட்டு கட்சியில் உள்ள இன்னும் திருமணமாகாத எம்பிக்கள் பற்றியதாகும்.

அவர்களுள் அதிகமாக பேசப்பட்டது அமைச்சர் காஞ்சன வீரசேகரவும்–இராஜாங்க அமைச்சர் டி.பி.சாணக்கவும்தான்.

இவர்கள் இருவரும் காதலிகளை பெறுவதற்கு நாமல் ராஜபக்ச உதவ வேண்டும் என்று.

அதற்கு இன்னொரு எம்பி சொன்னார் இல்லை.அவர்கள் இருவருக்கும் காதலிகள் இருக்கிறார்கள்.சானகவுக்கு ஆம்.. அவர்கள் இருவருக்கும் இன்னும் திருமணமாகவில்லை.

அப்போது ஓர் எம்பி சொன்னார் அவரது ஊரில் காதலி இருக்கிறார்.அது நாமலுக்குத் தெரியும் என்றார்.



## என்னிடம் மட்டுமே உள்ளது

அத்தோடு, அந்த ஊடகவியலாளர் வைத்திருந்த கமராவை பற்றி விசாரிக்கத் தொடங்கினார் சஜித்.

கமரா மீது சஜித்துக்கு விருப்பம் அதிகம்.அவர் இயற்கை காட்சிகளை படம் பிடிப்பதில் விருப்பமுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

"என்ன கமரா இதுசின்னதா இருக்கு.இந்தமாதிரி பெரிய நிகழ்ச்சிகளுக்கு இது போதுமா .." என்று கேட்டார்.

"இது sony கமரா. வீடியோ, போட்டோ ரெண்டுக்கும் இதுதான் சரி" என்றார் அந்த ஊடகவியலாளர்.

"ஆ..என்ட விருப்பமான கமரா இது. நான் அதிகம் கமரா பாவிப்பது காடுகளில் மிருகங்களை படம் படிப்பதற்கு. அதுல எனக்கு விருப்பம் அதிகம்தானே..." என்கிறார்.

அத்தோடு இன்னொரு விடயத்தையும் சொன்னார்...

"உங்களுக்கு தெரியுமா? கருஞ்சிறுத்தை படம் எனக்கிட்ட மட்டும்தான் இருக்கு.. என்றார்.





## ஜனாதிபதிக்கு வந்து குவிந்த தொலைபேசி அழைப்புகள்

எதிர்கால பொருளாதார திட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜூன் மாதம் முதலாம் திகதி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார் அல்லவா.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு தொலைபேசி அழைப்புகள் வந்து குவியத் தொடங்கியதாம்.எல்லாம் பாராட்டு தொலைபேசி அழைப்புகள்.

அதிலும் குறிப்பிடக்கூடிய விடயம் என்னவென்றால் ஐக்கிய மக்கள் சக்திஇஜேவிபிஇதமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள்தான் அதிகமாக பாராட்டினார்களாம். நாட்டை முன்னேற்றுவதற்காக நீங்கள் முன்வைத்துள்ள இந்தத் திட்டத்துக்கு மாற்றுத் திட்டமே கிடையாது. இதற்கு நாங்கள் ஆதரவு வழங்குவோம் என்றார்களாம்.



# கஞ்சா உற்பத்திக்கு அமைச்சரவை அனுமதி பெற நடவடிக்கை

கஞ்சா பயிர்ச்செய்கை முன்னோடி திட்டத்திற்கு அமைச்சரவையின் அனுமதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

செயற்றிட்டத்தின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

கஞ்சா வளர்ப்பு திட்ட அறிக்கையை சமர்ப்பித்த உள்ளூர் முதலீட்டாளர்களுடன் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

# 40 லட்சம் புதிய ஏழைகள்

இலங்கை சனத் தொகையில் 40 லட்சம் பேர் புதிதாக ஏழைகள் பட்டியலில் இடம்பிடித்துள்ளனர். டநயசெ யளைய நிறுவனம் நாடு பூராகவும் நடத்திய ஆய்விலேயே இது தெரிய வந்துள்ளது.

கடந்த நான்கு வருடங்களில் இந்த அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது.

அதன்படி 2023 ஆகும்போது இலங்கையில் உள்ள மொத்த ஏழைகளின் எண்ணிக்கை 70 லட்சமாகும்.இலங்கை சனத்தொகையில் இது 31 வீதமாகும்.

இவர்களுள் 81 வீதமானவர்கள் கிராமிய மக்கள் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2019 வரை கிராமிய மட்டத்தில் 15 வீதமாக இருந்த வறுமை இப்போது 32 வீதமாக-இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

அதேபோல் 2019 வரை நகர மட்டத்தில் 6 வீதமாக இருந்த வறுமை இப்போது 18 வீதமாக-மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

# 62இல் 25 நிறைவேற்றம்

சர்வதேச நாணய நிதியத்தின் 62 நிபந்தைகளுள் 25 ஐ மாத்திரமே இலங்கை அரசு இதுவரை நிறைவேற்றயுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இரண்டாவது தவனைக் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு முன் அரசு இன்னும் 37 நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது.

அதுவும் செப்டம்பர் மாதத்துக்கு முன் நிறைவேற்ற வேண்டும்.அப்போதுதான் இரண்டாவது தவனைக் கடனைப் பெற முடியும்.

மேலும் அரசு நிறைவேற்றுவதாக வாக்களித்த 10 விடயங்கள் பற்றி இதுவரை எந்தத் தகவலும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# வெளிநாட்டு தொழில் தேடுவோர் இரண்டு மடங்காக அதிகரிப்பு!

2022 இற்கு முன் உள்ள வருடங்களுல் ஒப்பிடுகையில் 2022இல் வெளிநாட்டு தொழில் வாய்ப்பைத் தேடிச் சென்றவர்களின் வீதம் 37 ஆக அதிகரித்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சின் அறிக்கை தெரிவிக்கிறது.

2015 இல் இருந்து ஒவ்வொரு வருடமும் அண்ணளவாக 2 லட்சத்து 26 ஆயிரம் பேர் வெளிநாடு சென்றனர்.

2022 இல் அது 3 லட்சத்து 11 ஆயிரம் வரை அதிகரித்துள்ளது.

இவ்வாறு சென்றவர்களும் 87 வீதமானவர்கள் எந்தவொரு தொழில் தகமையும் இல்லாதவர்கள் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

பாடசாலைகளிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இன்று முதல் டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குப் பின்னர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, நாடு முழுவதும் உள்ள பாடசாலை நிர்வாகங்களின் ஆதரவுடன், பாடசாலைகளுக்கு அருகாமையில் நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கொழும்பு மாநகர சபை அதிகாரிகளின் பங்களிப்புடன் கொழும்பு நகர எல்லைக்குள் விசேட ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.




# கால அவகாசம் நீடிப்பு

பாடசாலை மாணவர்களுக்கான மாதாந்த ரயில் பருவச்சீட்டினை பெறுவதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் 16ஆம் திகதி வரை இந்த கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அனைத்து ரயில் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அந் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 20 வீதத்தால் குறையும் கையடக்கத் தொலைபேசிகள் விலை




கையடக்க தொலைபேசிகள் மற்றும் உபகரணங்களின் விலையை சுமார் 20 வீதத்தால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கையடக்க தொலைபேசி இறக்குமதியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று (09) கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சங்கத்தின் தலைவர் சமித் செனரத் இதனை தெரிவித்தார்.

அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி வலுப்பெற்று வரும் நிலையில் இதன் பலனை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# டொலரின் விலை குறைந்தபோதும் பொருட்களின் விலைகள் குறையவில்லை

## -ஜனாதிபதியிடம் முறையிட்ட எம்பிக்கள்-



டொலரின் விலை குறைந்துகொண்டு செல்கின்றபோதிலும்,பொருட்களின் விலைகள் குறையாமை தொடர்பில் மொட்டு கட்சி எம்பிக்கள் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த வாரம் இந்த எம்பிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்த முறைப்பாட்டை முன்வைத்தனர்.

டொலரின் விலைகள் குறைந்துகொண்டு செல்கின்றன. ஆனால்,பொருட்களின் விலைகள் குறைவதாக இல்லை.இதுபற்றி மக்கள் பேசத் தொடங்கியுள்ளனர்.

டொலரின் விலை குறைப்பின் பயனை மக்கள் அடையவில்லை என்றால் அதனால் அரசுக்கு எந்த பிரயோசனமும் இல்லை.அரசுக்குத்தான் ஆபத்து.

மக்கள் நன்மை அடையவில்லை என்றால் நாம் கஷ்டப்பட்டு டொலரின் பெறுமதியை குறைப்பதில் என்ன இலாபம் இருக்கிறது எமக்கு.

இது தொடர்ப்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள் என்று மொட்டு எம்பிக்கள் ஜனாதிபதியிடம் கேட்டனர்.

கடந்த வருடம் 70 வீதமாக இருந்த பண வீக்கம் இப்போது 25 வீதமாகக் குறைந்துள்ளது.இன்னும் சில நாட்களில் 20 வீதமாகக் குறையும்.

இந்த வருடம் முடிவில் எல்லா பிரச்சினைகளையும் முடிவுக்கு கொண்டு வந்து பணவீக்கத்தை தனி இலக்கத்துக்கு கொண்டு வருவதற்கே நான் முயற்சி செய்கிறேன். என்று ஜனாதிபதி அவர்களுக்கு பதில் வழங்கினார்.

பணவீக்கம் குறைந்துள்ளமை தொடர்பில் ஜனாதிபதி எப்படித்தான் பாடம் நடத்தினாலும் அது மக்களை இன்னும் சென்றடையவில்லை என்பதுதான் கவலையான விடயம்.

# அதிசொகுசு குடியிருப்புத் தொகுதி

Prime Group இன் அதிசொகுசு வாய்ந்த குடியிருப்புத் தொகுதியான The Grand Ward Place, 2023 மே மாதம் 15ஆம் திகதி குடியிருப்பாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

கொழும்பு 7 பகுதியில் அமைந்துள்ள ஒரே வானுயர்ந்த நிர்மாணத்தொகுதியான The Grand Ward Place, அதிகளவு பிரத்தியேகத்தன்மை மற்றும் நகரின் சிறந்த காட்சியமைப்புகளை வழங்குவதுடன், குடியிருப்பாளர்களுக்கு நவீன காலகட்டத்துக்கு பொருத்தமான வகையில் தமது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான வசதிகளைக் கொண்டமைந்துள்ளது.

இந்த உத்தியோகபூர்வ கையளிப்பு வைபவத்தின் போது, குடியிருப்பாளர்களுக்கு அவசியமான ஆவணங்களான Certificate of Conformity (COC), CMA பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் மற்றும்




உறுதிப் பத்திரம் போன்றனவும் கையளிக்கப்பட்டிருந்தன.

இதனூடாக, குடியிருப்பாளர்களுக்கு தமது குடியிருப்புக்கான சாவியைப் பெற்றுக் கொண்டதும், அவற்றின் உரிமை மாற்றத்தை உடனடியாக மேற்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் ரியல் எஸ்டேட் தொழிற்துறை எதிர்நோக்கியுள்ள பாரியளவு சவால்களுக்கு மத்தியில் இது வரவேற்கத்தக்க விடயமாக அமைந்துள்ளது.

2019 ஆம் ஆண்டில் Property Guru Asia Property விருதுகளில் இலங்கையின் சிறந்த சொகுசு தொடர்மனையாக தெரிவு செய்யப்பட்டிருந்த The Grand Ward Place, குடியிருப்பாளர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த வசதிகளை பயன்படுத்தும் வாய்ப்பை வழங்குகின்றது.

# Microsoft மற்றும் DP Education இணைவு




Microsoft ஸ்ரீ லங்கா மற்றும் தம்மிக மற்றும் பிரிசிலியா மையத்தின் இலாப நோக்கற்ற கல்விப் பிரிவான DP Education, தேசத்தின் இளைஞர்களின் டிஜிட்டல் அறிவு, தொழில்நுட்பத்தின் வலுவை பயன்படுத்துவதற்கான அறிவைப் பெற்றுக் கொடுத்து, விசேடமாக 21ஆம் நூற்றாண்டுக்கான தொழில்நுட்ப அறிவை பெற்றுக் கொடுத்து, பிரகாசமான எதிர்காலத்தை ஏற்படுத்தும் வகையில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தன.

STREAM, coding மற்றும் டிஜிட்டல் திறன்கள் போன்றவற்றுடன் இலங்கை டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்து வரும் நிலையில், அடுத்துவரும் தசாப்த காலப்பகுதியில் இலங்கையின் பணியாளர் வர்க்கத்தில் இணைந்து கொள்ளும் இளைஞர்களுக்கு இந்த விடயம் சார் அறிவு இன்றியமையாததாக உள்ளது.

DP Education தவிசாளரும் ஸ்தாபகருமான தம்மிக பெரேரா மற்றும் Microsoft ஸ்ரீ லங்கா மற்றும் மாலைதீவுகள் முகாமையாளர் ஹர்ஷ ரந்தெனி ஆகியோரிடையே இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை பரிமாறப்பட்டது. இந்நிகழ்வில் Microsoft மற்றும் DP Education ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

நாடு முழுவதையும் சேர்ந்த மாணவர்களுக்கு AI, coding, robotics மற்றும் computer programming ஆகியவற்றை இலவசமாக பயில்வதற்கு வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில், DP Education இனால் DP Education AI, Coding and Robotics Campus இல் திட்டத்தை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

# Ashok Leyland உடன் கைகோர்க்கும் HNB




லங்கா அசோக் லேலண்ட் வர்த்தக வாகனங்களைக் கொள்வனவு செய்யவுள்ள வாடிக்கையாளர்களுக்கு HNB வங்கி , நாட்டின் முன்னணி கனரக வர்த்தக வாகன விநியோகஸ்தரான Lanka Ashok Leyland (LAL) உடன் மீண்டும் கைகோர்த்து வாடிக்கையாளர்களுக்கு பல தனித்துவமான நன்மைகள் மற்றும் விதிவிலக்கான வட்டி விகிதங்களை வழங்கியுள்ளது.

DOST டிரக்குகளை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இந்த கூட்டாண்மை மூலம் சிறப்பு லீசிங் தொகுப்புகள் மற்றும் பல மேலதிக நன்மைகளும் வழங்கப்படும்.

இந்த கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவித்த உடீ உதவிப் பொது முகாமையாளர் – தனிப்பட்ட நிதிச் சேவைகள், காஞ்சன கருணாகம, "லங்கா அசோக் லேலண்ட் உடனான நீண்டகால உறவைப் புதுப்பிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

கடந்த இரண்டு வருடங்கள் சவாலானதாக இருந்தாலும், நாடு முழுவதிலும் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் சிறு வணிகங்களை மீளக் கட்டியெழுப்புவது மிகவும் முக்கியமானதாகும். அந்தவகையில், இலங்கையில் உள்ள முன்னணி வர்த்தக வாகன விநியோகஸ்த நிறுவனத்துடன் நாங்கள் எங்கள் கூட்டாண்மையை புதுப்பித்துள்ளோம்.

எங்கள் வாடிக்கையாளர்கள் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் வணிகத்தை மேம்படுத்த உதவுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்." என தெரிவித்தார்.




# றைனோவின் நோயாளர் காத்திருப்பு பகுதி

இலங்கையில் கூரைத் தயாரிப்புகள் துறையின் சந்தை முன்னோடியாகத் திகழும் றைனோ ரூஃபிங் புரொடக்ட்ஸ் லிமிடெட், கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையின் சிகிச்சைத் தொகுதி வளாகத்தில் நோயாளர் காத்திருப்பு பகுதி ஒன்றை நிர்மாணித்துள்ளது.



வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருகை தருவோருக்கும், அவர்களுடன் சமூகமளிக்கும் குடும்பத்தாருக்கும் சௌகரியத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் இந்த நிர்மாணம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த காத்திருப்பு பகுதியின் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம்பெற்றதுடன், இதில் றைனோ ரூஃபிங் புரொடக்ட்ஸ் லிமிடெட் முகாமைத்துவ பணிப்பாளர் ஈ.ஜே. ஞானம், றைனோ நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ மற்றும் ஊழிய அங்கத்தவர்கள், கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளர். வைத்தியர். (திருமதி) ஹிமாலி விஜேகுணசேகர மற்றும் கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையின் சிரேஷ்ட மருத்துவ அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

100 நோயாளர்கள் வரை காத்திருக்கக்கூடிய வகையில் 1400 சதுர அடிப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த காத்திருப்பு அறையில் பொது அறிவித்தல் கட்டமைப்பு மற்றும் மின்விசிறிகள் போன்றன பொருத்தப்பட்டுள்ளன.

# நெஸ்லேயின் செயலமர்வு

நெஸ்லே லங்கா நிறுவனம் ஆசியா, ஓசானியா மற்றும் ஆபிரிக்கா ஆகிய பிராந்தியங்களைச் சேர்ந்த நெஸ்லேயின் பால் சார்ந்த நிபுணத்துவ அணியை வரவழைத்து, நிறுவனத்தின் நிலைபேறாண்மை இலட்சியத்திற்கு அமைவாக, 2030 ஆம் ஆண்டளவில் உமிழ்வை 50வீதத்தால் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட வேலைத்திட்டமொன்றை வடிவமைப்பதற்காக செயலர்வொன்றை நடாத்தியுள்ளது.

ஒரு வார காலமாக இடம்பெற்ற இச்செயலமர்வில், 10 க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்று, நெஸ்லேயின் சமீபத்திய, புத்தம்புதிய பாலைப் பெற்றுக்கொள்ளும் தரநிலை தொடர்பாக பயிற்சி பெற்றனர்.

அத்துடன், மீளுருவாக்க விவசாய நடைமுறைகள் தொடர்பான பயனுள்ள கலந்துரையாடலிலும் அவர்கள் ஈடுபட்டனர். மேலும் அணியானது தனது நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொண்டு, உள்நாட்டு சமூகங்கள் உலகளாவிய



சிறந்த நடைமுறைகளைப் பின்பற்ற உதவும் முகமாக நெஸ்லே லங்காவின் பால் வழங்கல் சங்கிலியிலுள்ள பல்வேறு தரப்பினர் மத்தியிலும் நேரடி விஜயம் செய்தது.

"இலங்கையில் பால் சார்ந்த தொழில்துறையை அபிவிருத்தி செய்வதற்கான எமது உறுதியான அர்ப்பணிப்புக்கு இணங்க, இலாபகரமான மற்றும் நிலைபேண்தகு வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப எமது பாற்பண்ணையாளர்கள் மற்றும் விவசாயிகள் வலையமைப்பிற்கு தொடர்ந்து உதவி வருகின்றோம்.

எனவே, நிகர பூஜ்ஜிய உமிழ்வை நோக்கிய நமது பயணத்திற்கு உதவுவதற்காக, பால் பண்ணை துறையில் உலகளாவிய சிறந்த நடைமுறைகள் தொடர்பில் கலந்தாலோசிக்க, ஆசியா, ஓசானியா மற்றும் ஆபிரிக்கா வலயம் முழுவதிலும் இருந்து பால் சார்ந்த நிபுணர்கள் அணியை வரவழைத்தமை எமக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இது உள்நாட்டு பால் உற்பத்தி சமூகத்திற்கு நாம் எமது பங்களிப்பை வழங்க மேலும் வாய்ப்பளிக்கும்," என்று நெஸ்லே லங்காவின் தொழில்நுட்ப பணிப்பாளரான திரு. பியர்-இம்மானுவேல் மொரின் அவர்கள் கூறினார்.

# ஜித்தாவில் இடம்பெற்ற IsDB வருடாந்த சந்திப்பில் அமானா



சவுதி அரேபியாவின், ஜித்தாவில் அண்மையில் இடம்பெற்ற 48ஆவது IsDB வருடாந்த சந்திப்பில் அமானா வங்கி பங்கேற்றிருந்தது. இந்த நிகழ்வில் முஜஊ அங்கத்துவ நாடுகளின் நிதி அமைச்சர்கள், மத்திய வங்கியின் ஆளுநர்கள் மற்றும் IsDB முதலீடுகள் வங்கிகள் மற்றும் நிறுவனங்களின் விருந்தினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நான்கு நாட்கள் இடம்பெற்ற இந்த நிகழ்வு, 57 OIC அங்கத்துவ நாடுகளின் பிரசன்னத்துக்கு மேலதிகமாக, உலகளாவிய ரீதியில் 90 நாடுகளின் 4000 க்கும் அதிகமானவர்களை கவர்ந்திருந்தது. உலக வங்கி, IMF, UNDP மற்றும் யுனுடீ போன்ற 89 முன்னணி பிராந்திய மற்றும் சர்வதேச பங்காளர் நிறுவனங்களும் இணைந்து கொண்டன.

அமானா வங்கியின் சார்பாக அதன் தவிசாளர் அஸ்கி அக்பரலி மற்றும் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹமட் அஸ்மீர் ஆகியோர் கலந்து கொண்டதுடன், பங்குபற்றுநர்களுடனான அமர்வுகளில் உயர் மட்ட கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டனர்.

அங்கத்துவ நாடுகளில் நிலவும் அபிவிருத்தி சவால்கள் மற்றும் நிறுவனசார் சவால்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெறும் அமர்வாக IsDB குழுமத்தின் வருடாந்த சந்திப்புகள் அமைந்துள்ளன. இந்த ஆண்டில் IsDB குழுமம் வெற்றிகரமான முறையில் உலக வங்கி, IMF, UNDP மற்றும் ADB போன்ற அரச, சர்வதேச மற்றும் பிராந்திய நிறுவனங்கள், தனியார் துறை, கல்விசார் நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகங்கள் போன்றவற்றின் உயர் மட்ட பேச்சாளர்களை ஈடுபடுத்தி தொடர் அறிவுப் பகிர்வு அமர்வுகளையும் முன்னணி நிகழ்வுகளையும் முன்னெடுத்திருந்தது.

‘Partnerships to Fend off Crises’ எனும் தொனிப்பொருளில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், கைகோர்ப்புகள், புத்தாக்கம் மற்றும் தந்திரோபாய இணைவுகள் போன்றவற்றை ஊக்குவிப்பதாக அமைந்திருந்தன.

## SLT-MOBITEL முதலிடம்..!!!



SLT-MOBITEL, 2021 – 2022 காலப்பகுதிக்கான பிஸ்னஸ் LNI TOP 40 தரப்படுத்தல்களில் தொலைத்தொடர்பாடல் துறையில் முதல் ஸ்தானத்தை தனதாக்கியிருந்தது. சிறந்த வினைத்திறன், நேர்த்தியான நிதிசார் வளர்ச்சி மற்றும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆற்றியிருந்த பங்களிப்பு போன்றவற்றுக்காக கௌரவிப்புகளைப் பெற்றிருந்தது.

2021 – 2022 காலப்பகுதியில், தேசம் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்திருந்தது. கடந்த இரண்டாண்டு காலப்பகுதியில் பல்வேறு நெருக்கடிகள் மற்றும் நெருக்கடியான சந்தைகளுடனான சமூகப் பொருளாதார சூழலில், SLT-MOBITEL இனால் வெற்றிகரமாக இந்த சவால்களுக்கு முகங்கொடுத்து, தொலைத்தொடர்பாடல் துறையில் முன்னோடியாக தன்னை நிலைநிறுத்த முடிந்திருந்தது. சிறப்புக்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்பை உறுதி செய்யும் வகையில் இந்த கௌரவிப்பு அமைந்திருந்தது.

மேலும், தொற்றுப் பரவல் காணப்பட்ட போதிலும், SLT-MOBITEL தடங்கல்களின்றி சேவைகளை வழங்கியிருந்ததுடன், ஆயிரக் கணக்கான வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களை டிஜிட்டல் கட்டமைப்புகளுக்கு மாற்றுவதற்கும் ஆதரவளித்திருந்தது.

மேலும், டிஜிட்டல் மாற்றியமைப்பு தந்திரோபாயத்தின் காரணமாக அதன் வினைத்திறனான செயற்பாடுகள் அமைந்திருந்ததுடன், எதிர்காலத்துக்கு தயாரான உரிய காலப்பகுதியில் தொழில்நுட்பசார் விரிவாக்கங்களை இனங்கண்டிருந்தது.

இன்றைய காலகட்டத்தில் தொலைத்தொடர்பாடல் துறையில் தன்னை முன்னோடியாக SLT-MOBITEL நிலைநிறுத்தியுள்ளது.

## IFS மற்றும் Hatch இன் ChallengerX



ChallengerX ஆனது, IFS மற்றும் Hatch ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பின் மூலம் உருவாக்கப்பட்ட இலங்கையின் முதலாவது AI மற்றும் இயந்திர கற்றலை மையப்படுத்திய அடைகாத்தல் திட்டத்தைக் குறிக்கிறது.

இங்கு தெரிவு செய்யப்பட்ட 6 அணிகளில் வெற்றி பெற்ற 2 அணிகளுக்கு ரூ. 2 மில்லியனுக்கும அதிக பணப்பரிசுகளை வழங்கி வைத்ததன் மூலம் இந்நிகழ்ச்சி நிறைவுக்கு வந்தது. இது இலங்கையில் தற்போது காணப்படும் இளம் தொழில்நுட்ப திறமையாளர்களின் உயர்ந்த திறமைக்கு ஒரு சான்றாகும்.

IFS மூலம் உள்ளூர் தொழில்நுட்ப திறமையாளர்களை உலகளாவிய வெளிப்பாட்டுக்கு இணைப்பதன் மூலமான, திறந்த புத்தாக்க தளங்களின் முக்கியத்துவத்தை இந்த திட்டம் எடுத்துரைக்கின்றது. நிறுவனம் தனது உலகளாவிய வாடிக்கையாளர் தளத்திற்கு புத்தாக்கமான தீர்வுகளை வழங்குவதற்கு வெளிப்புற மூலங்களிலிருந்தான முன்னோக்குகளை மேம்படுத்த இது உதவுகிறது.




# செலான் வங்கியின் நிதி முகாமைத்துவ கற்கை நிகழ்வு



செலான் வங்கி, அண்மையில் தனித்துவமான நிகழ்வொன்றை திவுலப்பிட்டியவில் ஒழுங்கமைத்திருந்தது. சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளின் வளர்ச்சிக்கு சாதகமான சூழல் ஒன்றை உருவாக்கும் அதேவேளை, இலங்கையின் பொருளாதாரத்துக்கு பக்கபலமாக இருப்பதற்கான தனது சளைக்காத அர்ப்பணிப்பை வலியுறுத்துவதே இதன் நோக்கமாகும்.

100 க்கு மேற்பட்ட சிறிய மற்றும் நடுத்தர வணிகத் தொழில் முயற்சியாளர்கள் தனிச்சிறப்பான நிபுணர் குழுவொன்று வழங்கிய உள்விடயங்களின் பயனைப் பெற்றுக்கொண்டனர். இக்குழுவில் ளுஆநு வணிக ஆலோசகரும், முகாமைத்துவப் பட்டப்பின் கற்கை நிறுவகம் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வருகைதரும் பீட அங்கத்தவருமான பேரா. ரவி பமுனுசிங்க, இலங்கை வயம்ப பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் பேரா. விஷ்வஜித் கந்தேகம, செலான் வங்கியின் மீள்நிதிச்சேவை சிரேஷ்ட முகாமையாளர் செஹான் கன்னங்கர மற்றும் செலான் வங்கியின் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தரன கோரளே ஆரச்சி ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர்.

இந்த நிகழ்வு நிச்சயமாக அவர்களுக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது எனலாம். தொழில் முயற்சியாளர்கள் தமது வணிகங்களை அபிவிருத்தி செய்து விஸ்தரிப்பதற்கு உதவும் பலதரப்பட்ட முக்கிய விடயங்கள் பற்றிய தெளிவு பெற்றுத் தரப்பட்டதோடு, டிஜிட்டல் சந்தைப்படுத்தலின் முக்கியத்துவம் பற்றியும் விசேடமாக வலியுறுத்தப்பட்டது.